**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 284 /2017**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.10.2025 | | |
| பெயர்: | லங்கேஷ்வரன் (DW– 2 Cross ) | தகப்பனார் பெயர்: | நன்னி |
| கிராமம்: | நாங்கூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 53/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 24.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.33)**

1. இந்த வழக்கு கண்ணன் என்பவர் பாலமுரளி மீது தாக்கல் செய்யப்பட்டதாகும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2005ம் வருடம் 1ம் வாதி கண்ணன் புருஷோத்தமன் கோயிலுக்கு சொந்தமான இடத்தை குத்தகை சாகுபடி செய்து வந்தார். அந்த சாகுபடி உரிமையை பாலமுரளி தகப்பனார் கோவிந்தராஜிடம் கண்ணன் விற்பனை செய்துவிட்டார். அதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. கடந்த 2005ம் வருடம் சாகுபடி உரிமை மாற்றல் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எனது முதல் விசாரணையில் எந்த தேதியில் நான் பத்திரத்தை பார்த்தேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரம் 2005ம் வருடம் எந்த தேதியில் எந்த மாதத்தில் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் ஆவணத்தை பார்க்காமல் வழக்கிற்காக பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. பிரதிவாதி பாலமுரளியை சுமார் 10 வருடங்களாக எனக்கு தெரியும்.

பாலமுரளி பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நாங்கூரில் பாலமுரளி செல்வாக்கான ஆள் என்றால் அவ்வாறு இல்லை. எந்தெந்த சர்வே எண்ணுக்கு கண்ணன் வழக்கிட்டுள்ளார் என்றால் புல எண் 190/1 ல் 1 ஏக்கர் 17 செண்ட். தாவா சொத்தின் சர்வே எண் 190/1 என்று நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் 1ம் பிரதிவாதி கண்ணன் VAO விடம் சென்று தாவா சர்வே எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளது போக மீத இடம் என்னிடத்தில் உள்ளது சம்மந்தமாக அடங்கல் கொடுக்கக்கூடாது என கூறியதன் வாயிலாக நான் தெரிந்துகொண்டேன்.

4. என்னுடைய முதல் விசாரணையில் தாவா சர்வே எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளது போக மீத இடம் என்னிடத்தில் உள்ளது என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது முதல் விசாரணையில் சர்வே எண் 190/1ல் வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் போக மீதி இடம் என்னிடத்தில் உள்ளது என்று கூறவில்லை என்றால் சரிதான். 1ம் வாதி 3 சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விபரம் எனக்கு தெரியாத காரணத்தால்தான் நான் எந்த சர்வே எண்ணையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

5. பொதுவாக கோயில் குத்தகை நிலம் என்றால் பகுதி செலுத்துவார்கள் என்றால் சரிதான். யார் பெயரில் பகுதி உள்ளதோ அவர் பெயருக்கு யார் பணம் செலுத்தினாலும் ரசீது தருவார்கள். பகுதி செலுத்தவில்லை என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுப்பார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் பாலமுரளிக்கு தாவா சொத்து சம்மந்தமாக பகுதி கட்டவில்லை என்பதற்காக அறிவிப்பு ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் பாக்கி தொகை ஏதும் இல்லாத காரணத்தால் கொடுக்கப்படவில்லை.

6. இந்த வழக்கில் பாலமுரளி பகுதி செலுத்தியதற்கான ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வதுபோல் பிரதிவாதியின் தந்தை 2005ம் வருடம் வாங்கியிருந்தால் அதற்கான

ஆவணங்கள் இருக்கும் என்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனார் 1ம் வாதியிடமிருந்து தாவா சொத்தினை வாங்கியிருந்தால் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பார், அவ்வாறு பெறவில்லை என்ற காரணத்தால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. தாவா சொத்தின் சர்வே எண் தெரியாத காரணத்தால் அனுபவத்தை பற்றி எனக்கு சாட்சியமளிக்க இயலாது என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எனது நீண்டகால நண்பர் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.55)**